# க.பொ.த. உயர்தர முன்னோடிப் பரீட்சை - 2021

**தமிழ் - I** | **T** | **72** | **I** | **சுட்டெண்:...........................**

**மூன்று மணித்தியாலம்** **மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்:**

* *பகுதி - I இல் உள்ள இரு வினாக்களுக்கும் பகுதி - II இல் உள்ளவற்றுள் எவையேறும் மூன்று வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.*

## பகுதி - I

**01)** மேல்வரும் செய்யுட்களை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ) கன்று தன் பயமுலை மாந்த முன்றிற்
றினைபிடி யுண்ணும் பெருங்கல் நாட
கெட்டிடத் துவந்த உதவி கட்டில்
வீறு பெற்று மறந்த மன்னன் போல
நன்றி மறந்தமையா யாயின் மென்சீர்க்
கலிமயிற் கலாவத் தன்னவிவள்
ஒலிமென் கூந்த லுரியவால் நினக்கே.

i. இச் செய்யுளின் பொருளை உமது மொழி நடையில் எழுதுக.
ii. இச் செய்யுளில் இடம்பெறும் இறைச்சிப் பொருளைத் தெளிவு படுத்துக.
iii. இச் செய்யுளில் காணப்படுகின்ற அகத்திணைப் பண்புகளை விளக்குக.

(12 புள்ளிகள்)

ஆ) வற் கலையி னுடையானை மாசடைந்த மெய்யானை
நற் கலையில் மதியென்ன நகையிழந்த முகத்தானைக்
கல் கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான்
வில் கையினின்று இடை வீழ, விம்முற்று நின்றொழிந்தான்

i. இச் செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தை விளக்குக.
ii. இச் செய்யுளில் பரதனின் தோற்றம் எவ்வாறு சித்திரிக்கப்பட்டுள்ளது?
iii. இச்செய்யுளில் இடம்பெறும் அணியினை இனங்கண்டு விளக்குக.

(12 புள்ளிகள்)

**02)**

**அ** பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

**ஆ** பகுதியிலுள்ள உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

அ) வெம்பு மணல் உண்டு மிஞ்சி
வெள்ளம் பெருக்கெடுத்துப்
பம்பும் மழைநீர், பயிரழிவு பண்ணுமென
அஞ்சிக், கமக்காரர்
ஆழியொடும் கூட்டிவிட்ட
குஞ்சி நீர் ஓடை
குறுமணலே வார்ந்திருக்கும்

பாம்பாய் கடல் வரையும்
பாயும் அந்தப் பள்ளத்தில்
சாம்பிக் குருத்தும் சருகான வெள்ளறுகைச்
சப்பி வயிற்றைச் சரிக்கட்டிச் சாய் பொழுதில்
அப்பாடா என்று களை ஆறும் பசுவொன்றின்
பக்கத்தில் வந்து பழகுமிரு காக்கைகள்

வெட்கத்தை விட்டும்
விரைந்து பசு மீதில்
ஏறி இறங்கி, இருந்து, விளையாட்டில்
ஊறி உணர்ச்சியிலே
ஒற்றுமையைக் காட்டும்

சுடலையிலே வண்ணார்
சலவை செய்யம் கேணி
வடபால் விழுதூன்றி
வாழும் வடக்கிளையில்
கூடுகட்டும் நோக்குடனே
குச்சுவகை சேகரிக்கப்
பாடுபடுகின்ற அண்டங் காகங்கள் தாமவைகள்

கொசுக்கள் படைநொய்ங்ங்
குரல் கேட்டுச் சாட்டை
விசுக்கும் பசுவாலில் தொங்கும் கருங்குழலில்
கட்டாதலைகின்ற காட்டெருமை போல் பேன்கள்
கிட்டநெருங்கி மயிர் கோதி, வாய் ஊறிப் பேன்
குத்துகின்ற காக்கைக் குடும்பம்
பொதுத் தொண்டில்
வைத்திருக்கும் நம்பிக்கை
வாழ்த்தத் தகுந்ததுவே

அப்பொழுதில் அப்பசுவுக் காத்திரம் ஏன் வந்ததுவோ?
சப்பளிந்துபோன வயிற்றைச் “சடா” ரென்று
தூக்கி வால்தூக்கிச் சுழற்றி அண்டங் காக்கைகளைத்
தாக்கியது கொம்பைத் தரை நோக்கித் தாழ்த்தியது.

காக்கையர் ஏதும்
கதையாமல் வேறுபுறம்
நோக்கிப் பசுமாடு ஊர்
நோக்கி நடக்கிறது

தொண்டுக்கு, நன்றி
துளியுமற்ற மாடிதென்று
அண்டங் காகங்கள் அறையும் அறமொழியே
உண்மையென எண்ணியதை ஒப்புகையில்....

**காகங்கள்**
**சொண்டுகளைப் பார்த்தேன்**
**சுருக்கென்ற துள்ளத்தில்!**
**தொண்டுக்குக் கூலியவை**
**கொண்ட பசுவால் மயிரைக்**
**கண்டேன் இதென்ன கனம்**
**தொண்டருங்கள் சொண்டினிலே!**
**என்றேன். சுடலையிலே ஆலமரம் நோக்கியவை**
**சென்றமர்ந்து கொண்டென்னைப் பார்த்துச் சிரித்தனவே**

i. இக் கவிதையில் தொனிக்கும் மையப்பொருள் யாது?
ii. இக் கவிதையின் குறியீடுகளாக வெளிப்படுத்தப்படுவோர் யாவர்?
iii. கவிதையில் இழையோடும் உணர்வுகளைத் தெளிவுபடுத்துக.
iv. "இதென்ன கனம் தொண்டருங்கள் சொண்டினிலே" என்ற வரிகளால் கவிஞர் உணர்த்தும் விடயத்தைக் குறிப்பிடுக.

(16 புள்ளிகள்)

**அல்லது**

ஆ) பிறரை அவமானப்படுத்தும் படியாகப் பேசவே படாது. 'நீங்கள் பேசுகிறது மடத்தனமாயிருக்கே' என்று அடிக்கடி நம்மவர்கள் பேச்சில் சொல்லிவிடுகிறார்கள். இவை வரம்பு கடந்த வார்த்தைப் பிரயோகமாகும். ஒருவனுக்கு 'மடையன்' என்று நற்சாட்சிப்பத்திரம் கொடுப்பதற்கு மற்றவன் சர்வகலாசாலையா? இந்த அற்ப அகம்பாவத்தால் வெகு சமயங்களில் இருவருக்குள் நல்லுறவு முறிந்து போகிறது. பகைமையையும் மனக் கசப்பையும் எளிதிலே சம்பாதித்துக் கொள்ளும் நாகரிகமில்லாத வழி இது.

எதையும் யோசிக்காமல் வெடு வெடுவென்று வார்த்தைகளைக் கொட்டி விடுவது விவேகத்தையும் நல்ல பழக்கத்தையும் பண்பாட்டையும் காண்பிக்காது. 'ஸ்பிலாஷ்' என்று இங்கிலீஷ் வார்த்தை இருக்கிறது. இது பத்திரிகை சம்பந்தமான சொல்.

"இந்த ஒப்பந்தம் லண்டன் நகரில் ஸ்பிலாஷ்" செய்யப்பட்டது என்று இங்கிலீஷில் வந்த தந்தியை ஒரு நண்பர் வினோதமாகத் தமிழ்ப்படுத்தி சேதியையே சின்னா பின்னப்படுத்தி விட்டார். இந்த ஒப்பந்தம் லண்டன் நகரில் (பத்திரிகையின் முக்கியமான இடத்தில்) கொட்டை எழுத்தில் பிரதான்யம் கொடுக்கப்பட்டது என்பது இதன் அர்த்தம். 'ஸ்பிலாஷ்' என்ற வார்த்தையை நண்பர் கேள்விப்பட்டது இல்லை. இங்கிலீஷ் அகராதியைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தார். இது நவீன வார்த்தையானதால் அகராதியிலும் இல்லை.

எனவே அவர் வார்த்தையின் அர்த்தத்தை யூகம் செய்தார். 'ஸ்பிலாஷ்' என்றால் முறிந்து போதல் என முடிவு செய்து கொண்டார். இந்த ஒப்பந்தம் லண்டன் நகரில் முறிந்து போய் விட்டது என்று அர்த்தம் செய்து எழுதிவிட்டார். இரு பத்திரிகையும் வெளிவந்து விட்டது. என்ன விபரீதமான அர்த்தம்! ஒப்பந்தம் நினைவேறிற்று என்பதற்குப் பதிலாக ஒப்பந்தம் முறிந்து போய் விட்டது என்று பத்திரிகையில் வந்தால் படிப்பவர்களுக்கு வயிற்று எரிச்சல் உண்டாக்காதா?

i. வரம்பு கடந்த வார்த்தைப் பிரயோகமாகக் கூறப்பட்டது யாது?
ii. நாகரிகமற்ற சம்பாஷணையின் விளைவுகள் எவை?
iii. வார்த்தையின் அர்த்தத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாமை பற்றிக் காட்டப்பட்ட விடயம் எது?
iv. பந்தியின் மொழிநடை பற்றிக் கருத்துரைக்குக.

(16 புள்ளிகள்)

## பகுதி - II

**03) வலியறிதல்** என்ற அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ) வலிமையின் பகுதிகளும் அவற்றை அறிந்து போருக்குச் செல்வோர் பயனும்
ஆ) தன்வலிமை அறியாததால் ஏற்படும் இழுக்கு
இ) பகைவனதும் அவனது துணையினதும் வலி, வலி அறியாதவிடத்தும் ஏற்படும் இழுக்கு
ஈ) மூவகை ஆற்றலுள் பெருமையின் பகுதியாகிய பொருட்செல்வ வலியறிதலின் சிறப்பு
உ) இவ்வதிகாரத்தில் இடம்பெறும் அணிகளைக் குறிப்பிட்டு விளக்குக.

(20 புள்ளிகள்)

04) பரதன் கங்கைக் கரையைக் கடப்பதற்கு குகனிடம் வேண்டுதல் தொடக்கம் சேனைகள் யாவும் கங்கையைக் கடத்தல் வரையான பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ. நாவாய்களின் தோற்றப் பொலிவு
ஆ. யானை, குதிரைப்படை வர்ணனைகள்
இ. மகளிரது தோற்றம்
ஈ. அணிப் பயன்பாடு

05) புதுமைப் பித்தனின் **'தமிழர் நாகரிகத்தில் கிராமிய வாழ்க்கை'** என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு, பின்வருவனவற்றை விளக்குக.

அ. நாகரிகம் என்றால் என்ன?
ஆ. பட்டணத்துக்காரருக்கு கிராமியம் தென்படாது என்பதனைக் கட்டுரையாசிரியர் எவ்வாறு விளக்குகிறார்
இ. கிராமத்தவரின் இயல்புகளாகக் கூறப்படுவனவற்றை விளக்குக.
ஈ. ஔவையார் பாடல்களினூடாக கிராமிய, நகர வாழ்க்கை வெளிப்படுமாற்றினை எடுத்துக் காட்டுக.

(20 புள்ளிகள்)

06) **'வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது'** என்ற நாவலை அடிப்படையாகக் கொண்டு

அ. கிராமிய மக்களின் கடின உழைப்பு.
ஆ. சமுதாய முன்னேற்றத்திற்கு நாவலாசிரியர் முன்வைக்கும் வழிமுறைகள்.
இ. 'சௌந்தரம்' என்ற பாத்திரப் படைப்பு
ஈ. நவீன நாவலுக்குரிய பண்புகள் இந்நாவலில் இடம்பெறல்
என்பவற்றை விளக்குக.

(20 புள்ளிகள்)

07) **தோம்பாவணி** காட்சிப் படலத்தை ஆதாரமாகக் கொண்டு,

அ. இடையர்களின் மகிழ்ச்சி
ஆ. மரியாளின் சிறப்பு
இ. சாந்தியின் ஐயத்திற்கான மரியாளின் பதில்
ஈ. ஆசிரியரின் கவித்துவம்
முதலியவற்றை விளக்குக.

(20 புள்ளிகள்)

08) பின்வருவனவற்றில் எவையேனும் இரண்டினை விளக்குக.

அ. சிலப்பதிகாரம் ஊர்காண் காதையில் கவுந்தி அடிகள் கோவலனுக்கு கூறிய அற உபதேசங்கள்
ஆ. பெண் விடுதலைபற்றிய பாரதியாரின் கருத்துக்கள்
இ. ஒரு வெண்மணற்கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது எனும் நாவலில் பெண்கல்வி முன்னேற்றத்தில் நாவலாசிரியர் கொண்ட அக்கறை
ஈ. நகுதக்கனரே எனும் புறநானூற்றுச் செய்யுளில் பாண்டிய மன்னனின் கடுஞ்சினமும் அதனூடாக வெளிப்படும் தன்மான உணர்வும்.
உ. திருவாசகத்தில் இறைவனின் பெருமைகள்.

(20 புள்ளிகள்)